# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தம்

---

(2001. ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**2001, ஒற்றோபர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 49.25** **தபாற் செலவு : ரூபா 8.75**

[2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 47/2001

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் VII அ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பானது, அதன் 41 ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றதென்பதுடன், இது அரசியலமைப்பின் VII அ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

### "அத்தியாயம் VIIஅ

### அரசியலமைப்புப் பேரவை

அரசியலமைப்புப் பேரவையின் அமைப்பு.

41அ. (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய (இவ்வத்தியாயத்தில் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும் :—

(அ) பிரதம அமைச்சர் ;

(ஆ) சபாநாயகர் ;

(இ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ;

(ஈ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஓராள் ;

(உ) பிரதம அமைச்சர் அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதன்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்கள் ;

2-H 12588-2,000 (2001/09)

(ஊ) பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் முறையே எந்த அரசியற் கட்சிகளை அல்லது சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்துள்ளார்களோ அந்த அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் அல்லாத அரசியற்கட்சிகளை அல்லது சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்படிக்கையின் மீது பெயர் குறித்து நியமிக்கப்பட்டு அத்துடன் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஓர் ஆள்.

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் உட்பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஐந்து ஆட்களைப் பெயர்குறித்து நியமனம் செய்கையில் பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் தலைவர்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும். அத்தகைய ஆட்களுள் மூவர், அந்தந்தச் சிறுபான்மையினச் சமுதாயத்தினர்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் சிறுபான்மையினரின் அக்கறைகளைப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கென பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ), (உ), (ஊ) என்னும் உட்பந்திகளின்கீழ் விடயத்திற்கேற்ப, நியமிக்கப்படவுள்ள அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள ஆட்கள், பகிரங்க வாழ்வில் தமக்கெனச் சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்திவாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும்.

(5) சனாதிபதியினாவர், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின் அல்லது (ஊ) என்னும் உட்பந்தியின்கீழ் பெயர் குறித்த நியமனங்கள் பற்றிய எழுத்திலான தகவல் கிடைக்கப்பெற்றதன்மீது, உடனடியாக அந்தந்த நியமனங்களைச் செய்தல் வேண்டும்.

(6) (அ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மீது, அரசியலமைப்பின் 64 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர், அத்தகைய கலைப்பைப் பின்பற்றிய பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அத்தகைய காலம்வரை, பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின் கீழும் (ஊ) என்னும் உட்பந்தியின் கீழும் நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்னதாகவே தமது பதவியைத் துறந்தாலொழிய அல்லது பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரும் அத்தகைய உறுப்பினர் பதவியில் மேற்கொண்டும் பணியாற்றுவதற்கு இயலாதவராகவும், அத்துடன் உடல் ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவராகவுமுள்ளார் என அபிப்பிராயம் கொள்ளுவதன்மீது சனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றமொன்றினால் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய, அல்லது அரசியலமைப்பின் 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர்மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது உறுப்புரை 41உ என்பதன் (7)ஆம் பந்தியின்கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் அல்லது (ஊ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றிருக்கும் பட்சத்தில், சனாதிபதி, வெற்றிடமேற்பட்டு இருகிழமைகளுக்குள்ளாகவும் அத்துடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனும் ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின்போது பதவிவகித்தல் வேண்டும்.

(9) இவ்வுறுப்புரையின் ஒராம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர், சனாதிபதியினால் பதவியிலிருந்து முன்கூட்டியே அகற்றப்பட்டாலொழிய, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(10) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் அல்லது (ஊ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், அந்த உட்பந்தியின்கீழ் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

(11) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின்கீழும், (உ) என்னும் உட்பந்தியின்கீழும் அத்துடன் (ஊ) என்னும் உட்பந்தியின் கீழும் சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையானது நியமனங்களை விதந்துரைத்தல்.

41ஆ. (1) ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக, சனாதிபதியினால் நியமிக்கப்படுதலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவரின் சார்பில் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கான ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்றபொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், வெவ்வேறு இனக் குழுக்களைப் பிரதிபலித்தலும் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகச் செயலாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர அகற்றப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

**அட்டவணை**

(அ) தேர்தல் ஆணைக்குழு.

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு.

(ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

(உ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான நிரந்தர ஆணைக்குழு.

(ஊ) நிதி ஆணைக்குழு.

(எ) எல்லைநிர்ணய ஆணைக்குழு.

பேரவையானது நியமனங்களை அங்கீகரித்தல்.

41இ. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றுக்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின்மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதிநான்கு நாட்களை விஞ்சுமொருகாலப்பகுதிக்குச் செயலாற்றுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் அல்லது அத்தகைய ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவராகச் செயலாற்றவென நியமிக்கப்பட்ட ஆளெவரும், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதலாகாது.

(4) உயர்நீதிமன்ற நீதிபதிகளினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும் நீதிபதிகளினதும் நியமனம் தொடர்பான அதன் பணியைப் பிரயோசிக்கையில் பேரவையானது பிரதம நீதியரசரினதும் சட்டத் துறைத் தலைமையதிபதியினதும் அபிப்பிராயங்களைப் பெறலாம்.

## அட்டவணை

### பாகம் I

(அ) பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும்.

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்.

(இ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் தவிர்ந்த உறுப்பினர்கள்.

## பாகம் II

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி.

(ஆ) கணக்காய்வாளர் தலைமையதிபதி.

(இ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி.

(ஈ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்).

(உ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

பேரவையின் செயலாளரும் அலுவலர்களும்.

41ஈ. (1) பேரவைக்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய வாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அதன் பணிகளை நிறைவேற்ற அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு அலுவலர்களைப் பேரவையானது நியமிக்கலாம்.

பேரவையின் கூட்டங்கள்.

41உ. (1) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடி பேரவையானது கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளரது பணிப்பின்மீது பேரவைச் செயலாளரினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன் தவிசாளர் வருகைதராதிருப்பின் பிரதம அமைச்சரும் பிரதம அமைச்சர் வருகை தராதிருப்பின் எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதலும் வேண்டும். தவிசாளர், பிரதம அமைச்சர் அத்துடன் எதிர்க்கட்சித்தலைவர் ஆகிய எல்லோரும் அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு வருகைதராதிருப்பின் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், தம்மிடையேயிருந்து உறுப்பினரொருவரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கவெனத்தெரிவு செய்தல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்யத் தேவைப் படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிபையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டு மென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும், அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டலொழிய, வலிதுடையதாத லுமாகாது.

(5) தவிசாளர் மூலவாக்கொன்றை உடையவ ராதலாகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சினை யின்மீது வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(6) பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறை யானது 41ஆ மற்றும் 41இ என்னும் உறுப்புரை களின்கீழ் ஏதேனும் நியமனத்துக்குப் பொருத்த மான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் உட்பட, பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) உறுப்புரை 41அ இன் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட வரும், பேரவையின் முன்கூட்டிய அனுமதியின்றி பேரவையின் அடுத்தடுத்த இரு கூட்டங்களுக்கு

வருகை தராதிருப்பவருமான பேரவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டங்களுள் இரண்டாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயனுறு வதாகப் பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப் படுதல் வேண்டும்.

பேரவையானது வேறு கடமைகளைப் புரிதல்.

41ஊ. பேரவையானது, அரசியலமைப்பால் அல்லது வேறேதேனும் சட்டத்தால் அதன்மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளையும் பணிகளையும் புரிதல் வேண்டும்.

செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப் பிக்கப்படுதல்.

41எ. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் முடிபுகளின் முடிவாந் தன்மை.

41ஏ. நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1), (2), (4) அத்துடன் (5) ஆம் பந்திகளின் ஏற்பாடு களுக்கமைவாக, நீதிமன்றமெதுவும், பேரவையின் ஏதேனும் முடிபை அல்லது பேரவையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகை யதுமான ஏதேனும் ஏதுவின் மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக் கவனிப்பதற்கான, கேட்பதற்கான அல்லது முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட் படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயா திக்கத்தைக் கொண்டிருத்தலாகாது என்பதுடன், அத்தகைய முடிபு, விதப்புரை அல்லது அங்கீ காரம் எல்லா நோக்கங்களுக்காகவும் முற்று முடிவானதாக இருத்தலும் வேண்டும்.".

அரசியலமைப்பின் 52 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**3.** அரசியலமைப்பின் 52 ஆம் உறுப்புரையானது, அதன் (7) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(7) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக —

(அ) பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம், நிருவாகத்துக்கான பாராளு மன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்)

அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, தேசிய பொலிசு ஆணைக்குழு, அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம்; அத்துடன்

(ஆ) கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக் களம்,

என்பன அரசாங்கத் திணைக்களங்களாகக் கருதப்படுத லாகாது.".

அரசியலமைப்பின் IX ஆம் அத்தியாயத்தை மாற்றீடு செய்தல்.

4. அரசியலமைப்பின் IX ஆம் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது :—

"அத்தியாயம் IX

நிறைவேற்றுத்துறை

பகிரங்க சேவை

பகிரங்க சேவை ஆணைக்குழு.

54. (1) இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்; அது அரசிலயமைப்புப் பேரவையின் விதப்புரை யின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற் பட்ட அனுபவத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவை யின் விதப்புரையின்மீது உறுப்பினரொருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆளெவரும், அவர் பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது ஓர் உள்ளூ ரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருப் பின் அல்லது வருவாராயின் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினரொருவராகத் தொடர்ந்து பதவி வகித்தலோ ஆகாது.

(3) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு நேர் முன்னர் அரச சேவையில் பகிரங்க அலுவலரொருவராகவிருந்த அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய நியமனம் பயனுறத் தொடங்கியதும் அத்தகைய பதவியை வகியாதொழிதல் வேண்டும் என்பதுடன், பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக மேற்கொண்டு நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது:

ஆயின், அத்தகைய எவரேனும் ஆள், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இல்லாதொழிகின்ற வரைக்கும், அல்லது அத்தகைய ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருக்கின்ற போது, விடயத்துக்கேற்ப, அவர் ஒரு பகிரங்க அலுவலராக அல்லது நீதித்துறை அலுவலராக இருந்திருப்பின் எந்த வயதில் ஓய்வுபெறும்படி தேவைப்படுத்தப்படுவாரோ அந்த வயதை எய்தினால், அத்தகைய சேவை தொடர்பிலான ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் அல்லது வேறு படிகள் கொடுத்தல் பற்றிய ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கங்களுக்காகப் பகிரங்க அலுவலரொருவராகவும் அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவும் அத்துடன் அரச சேவையில் ஓய்வூதியங்கொண்ட பதவியொன்றை வகிக்கின்றவராகவும், கருதப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாபதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்கூட்டியே தமது பதவியைத் துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம்

உறுப்புரையின் நியதிகளின்படி அவர்மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மான மொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின்கீழ்த் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டா லொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும் ; ஆனால் உறுப்பி னராக அவரது பதவிக்காலம் காலாவதியான பின்னர் பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக நியமிக்கப்படு வதற்குத் தகவுடையவராதலாகாது. உறுப்பினரெ வரும், இரு தடவைகளுக்குமேல் ஆணைக் குழுவின் உறுப்பினரொருவராகப் பதவி வகிப்ப தற்குத் தகவுடையவராதலாகாது.

(6) ஆணைக்குழுவின் முன்கூட்டிய அனுமதி யைப் பெறாது ஆணைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அத்த கைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியலிருந்து பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணைக் குழுவின் உறுப்பினரொருவராக மீள நியமிக் கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது.

(7) சனாதிபதி, இரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு ஆணைக்குழு தொடர் பான உறுப்பினரொருவரின் கடமைகளைப் புரிவதிலிருந்து அவருக்கு விடுப்பு வழங்கலாம். அத்துடன் அத்தகைய காலப்பகுதியின்போது, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக விருப்பதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரை அத்தகைய விடுப்புக் காலப்பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கு நியமித்தல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்குப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேதனாதிகள் செலுத்தப் படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பின ரொருவருக்குச் செலுத்தப்படும் வேதனாதிகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமா காது.

(9) ஆணைக்குழுவானது, அதன் உறுப் பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவ முடையதாதல் வேண்டும் என்பதுடன், ஆணைக் குழுவின் ஏதேனும் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும், அத்தகைய வெற்றிடம் இருப்ப தன் காரணமாக மட்டும் அல்லது உறுப்பின ரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், செல்லுபடியற்ற தாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப் படுதலோ ஆகாது.

(10) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டிய ஆணைக்குழுச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும்.

(11) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு வின் உறுப்பினரொருவர் பகிரங்க சேவையாள ராகக் கருதப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவை பற்றிய ஆணைக் குழுவினதும் தத்துவங்களும் பணிகளும்.

55. (1) பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப் பாடு அத்துடன் பதவிநீக்கம் என்பன ஆணைக் குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, சட்டத்தினால் தாபிக் கப்பட்ட மாகாணப் பகிரங்க சேவை ஆணைக் குழுக்களின் பணிகளையும் தத்துவங்களையும் மதிப்புக் குறைத்தலாகாது.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எல்லாத் திணைக்களத் தலைவர்களினதும் நியமனமும், பதவியுயர்வும், இடமாற்றமும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் அத்துடன் பதவி நீக்கமும் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, ஆணைக்குழுவின் கருத்தை நிச்சயித்த பின்னர் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(4) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, அமைச்சரவையானது பகிரங்க அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கொள்கை விடயங்களையும் ஏற்பாடு செய்தலும் தீர்மானித்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பைக் கொண்டதாதலும் வகைசொல்லற்பாலதாதலும் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும், அவ்வாண்டில் அதன் செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிக்கையைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புதலும் வேண்டும்.

ஆணைக் குழுவின் குழுக்கள்.

56. (1) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட (ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவிராத) மூன்று பேரைக் கொண்ட குழுவொன்றுக்கு, ஆணைக்குழுவினாற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவிநீக்கம் என்பனவற்றுக்கான தத்துவங்களை ஆணைக்குழு கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய ஏதேனும் குழுவின் நியமனத்தை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) அத்தகைய ஏதேனும் குழுவின் கூட்டங்களுக்கான நடவடிக்கைமுறையும் கூட்டநடப்பெண்ணும் அதற்கென ஆக்கப்படும் விதிகளின் மூலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது அத்தகைய விதிகளைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டிய செயலாளரொருவர் ஒவ்வொரு குழுவுக்கும் இருத்தல் வேண்டும்.

ஒரு பகிரங்க அலுவலருக்குப் பணிகள் கையளிக்கப் படுதல்.

57. (1) ஆணைக்குழுவானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடவடிக்கைமுறைக்கும் அமைய, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலரின் நியமன, பதவியுயர்வு, இடமாற்ற, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அல்லது பதவிநீக்கத் தத்துவங்களைப் பகிரங்க அலுவலரொருவருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளும் நடவடிக்கைமுறையும் உட்பட, அத்தகைய ஏதேனும் கையளிப்பைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

மேன்முறையீட்டு உரிமை.

58. (1) எவரேனும் பகிரங்க அலுவலரொருவர் தொடர்பில் 56 ஆம் உறுப்புரையின்கீழான அல்லது 57 ஆம் உறுப்புரையின்கீழான குழுவொன்றினால் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரினால் ஆக்கப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம், பதவிநீக்கம் தொடர்பான கட்டளையொன்றினால் அல்லது ஓர் ஒழுக்காற்றுக் கருமம் மீதான ஏதேனும் கட்டளையொன்றினால் அவ்வாறு இன்னலுறும் அலுவலர், ஆணைக்குழுவுக்கான மேன்முறையீடொன்றைச் செய்வதிலும், கேட்பதிலும், தீர்மானிப்பதிலும் பின்பற்றவேண்டிய

நடவடிக்கைமுறையும், மேன்முறையீடொன்று கேட்கப்பட்டு முடிவுறுத்தப்படும் காலப்பகுதியும் தொடர்பாகக் காலத்துக்குக்காலம் ஆணைக்குழு வினால் ஆக்கப்படும் அத்தகைய விதிகளுக் கிணங்க அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய மேன் முறையீட்டின்மீது, எக்கட்டளைக்கெதிராக மேன் முறையீடொன்று செய்யப்படுகின்றதோ அக் கட்டளையை மாற்றுவதற்கான அல்லது உறுதிப் படுத்துவதற்கான, அல்லது அது தொடர்பாகப் பணிப்புகள் விடுப்பதற்கான அல்லது ஆணைக் குழு பொருத்தமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணை யைக் கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் அதனால் ஆக்கப்படும் விதிகளைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

நிருவாக மேன்முறை யீடுகள் நியாயசபை.

59. (1) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவி னால் நியமிக்கப்படும் நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையொன்றிருத்தல் வேண்டும்.

(2) நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை, ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது ஒழிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) மேன்முறையீடுகளைச் செய்வதற்கான காலவரையறைகள் உட்பட, அத்தகைய நியாய சபையின் அமைப்பும் தத்துவங்களும் நடவடிக்கைமுறையும் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

கையளிப்புள்ள விடத்து ஆணைக்குழுத் தத்துவத்தைப் பிரயோகிக்கா திருத்தல்.

60. விடயத்துக்கேற்ப, 56 ஆம் உறுப்புரையின் கீழ் அல்லது 57 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு குழுவுக்கு அல்லது பகிரங்க அலுவலருக்கு ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களுள் எவற்றையும் கையளிப்பதன்மீது, அத்தகைய கையளிப்பு வலுவிருக்கையில் ஆணைக்குழுவானது, 58 ஆம் உறுப்புரையின், (1) ஆம், (2) ஆம் பந்திகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கையளிப்பு எந்த வகுதியினரான பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த வகுதியினரான பகிரங்க அலுவலர்கள் தொடர்பாக அதன் பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகித்தலோ அல்லது புரிதலோ ஆகாது.

கூட்டங்களிலான நடவடிக்கை முறை.

61. (1) ஆணைக்குழுவின் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் எடுக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் கூட்டத்துக்குத் தலைமைதாங்குகின்ற உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், அவர் வருகை தராதிருப்பின் வருகைதந்த உறுப்பினர்களால் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைவகித்தல் வேண்டும்.

சட்ட நடவடிக்கைக ளிலிருந்தான விடுபாட்டுரிமை.

61அ. நூற்றியிருபத்தோறாம் உறுப்புரையின் (1) ஆம், (2) ஆம், (4) ஆம், அத்துடன் (5) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், இவ்வத்தியாயத்

தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது ஒரு குழுவுக்கு அல்லது பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி ஆணைக்குழுவால், ஒரு குழுவினால் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரிப்பதற்கான, அதன்மீது எடுத்துரைப்பதற்கான அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

வலுவிலுள்ள விதிகளும் ஒழுங்கு விதிகளும் பற்றிய பேணல்கள்.

61ஆ. ஆணைக்குழு வேறுவகையாக ஏற்பாடு செய்யும்வரை, இவ்வத்தியாயம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று வலுவிலுள்ளவாறான பகிரங்க சேவை தொடர்பான எல்லா விதிகளும், ஒழுங்குவிதிகளும், நடவடிக்கைமுறைகளும், அவை, இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்கப்பட்டிருந்தன அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்றாற்போன்று, பகிரங்க சேவை தொடர்பான விதிகளாகவும் ஒழுங்குவிதிகளாகவும், நடவடிக்கைமுறைகளாகவும் ஏற்றமாற்றங்களுடன் தொடர்ந்து வலுவிலுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவுடன் தலையிடுதல்.

61இ. (1) தமது சட்டமுறையான கடமையின் போது தவிர வேறுவகையாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது, தாமே அல்லது எவரேனும் ஆள் மூலம் அல்லது ஆளுடன் சேர்ந்து எத்தகையதுமான ஏதேனும் முறையில், ஆணைக்குழுவின் அல்லது குழுவொன்றின் அல்லது இவ்வத்தியாயத்தின்கீழ் ஆணைக்குழு எந்தப் பகிரங்க அலுவலருக்கு ஏதேனும் தத்துவத்தைக் கையளித்துள்ளதோ அந்தப் பகிரங்க அலுவலரொருவரின், ஏதேனும் முடிபின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செலுத்த முயற்சிக்கின்ற அல்லது அதனோடு தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் அல்லது

குழுவொன்றின் எவரேனும் உறுப்பினர்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செலுத்த முயற்சிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ ஆம் உறுப்புரையின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் மேல் நீதிமன்றம் இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கேட்டுத் தீர்மானிக்க நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை.

61ஈ. இவ்வத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்புக்கான நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழொப்பமிடும்வரை அல்லது உறுதியுரையை மொழிந்து கீழொப்பமிடும்வரை தமது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதல் ஆகாது.

சனாதிபதி சிலவான நியமனங்கள்.

61உ. சனாதிபதியானவர் —

(அ) தரைப்படை, கடற்படை அத்துடன் வான் படைத் தலைவர்களையும் ; அத்துடன்

(ஆ) 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, சட்டத்துறைத் தலைமையதிபதியையும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும்,

நியமித்தல் வேண்டும்.

பொருள் கோடல்.

61ஊ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, "பகிரங்க அலுவலர்" என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை, தேசிய பொலிசு ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் பொலிசு அலுவலரொருவரை அல்லது நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலரொருவரை உள்ளடக்காது.

அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

5. அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவர், 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியில், "ஆளொருவரைச் சனாதிபதி நியமிக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆளொருவரை 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதி நியமிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

6. அரசியலமைப்பின் 89 உறுப்புரையானது, அவ்வுறுப்புரையின் (ஒ) என்னும் பந்தியில், "116 ஆம் உறுப்புரையின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக, "விடயத்துக்கேற்ப, 116 ஆம் உறுப்புரைக்கு அல்லது 111இ என்னும் உறுப்புரைக்குக்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

7. அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையானது, அதன் (1) ஆம் பந்தியில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பந்தியின் (ஈ) (iv) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ivஅ) மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகவிருந்தால் ;"

(2) அப்பந்தியின் (ஈ) (V) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :–

"(V) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியாக இருந்தால்;"

(3) அப்பந்தியின் (ஈ) (V) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(Vஅ) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருந்தால்,

(Vஆ) அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினரொருவராக இருந்தால்,

(Vஇ) தேசிய பொலிசு ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக இருந்தால்,". அத்துடன்

(4) அப்பந்தியின் (ஈ) (viii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(viiiஅ) 1988 பெப்ருவரி 1 ஆம் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப் பட்ட தேதியன்று பாராளுமன்றத் தீர்மானத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய தொகைக்குக் குறையாத தொடக்கச் சம்பளத்தை சம்பள அளவுத் திட்டமாகக் கொண்டதுமான அல்லது அத்தகைய சம்பள அளவுத் திட்டங்களின் ஏதேனும் பின்னைய மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாகவிருக்கும் ஆண்டொன்றுக்கான அத்தகைய வேறு தொகையைச் சம்பள அளவுத் திட்டமாகக் கொண்டதுமான ஏதேனும் பதவியை வகிக்கும் ஒரு மாகாணப் பகிரங்க சேவையின் ஓர் அலுவலராக இருந்தால் ."

8. அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையும் 104 ஆம் உறுப்புரையும் இத்தால் நீக்கப்படுகின்றன. *அரசியலமைப்பின் 103 ஆம், 104 ஆம் உறுப்புரைகளை நீக்குதல்.*

அரசியலமைப்பில் XIV.அ என்னும் அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

9. பின்வரும் புதிய அத்தியாயம் அரசியலமைப்பின் 102 ஆம் உறுப்புரையை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன், அது அரசியலமைப்பின் அத்தியாயம் XIV.அ ஆகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அத்தியாயம் XIV.அ

தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு.

103. (1) இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும் தேர்தல் ஆணைக் குழுவொன்று இருத்தல் வேண்டும்; அது, ஏதேனும் உயர்தொழிலில் அல்லது நிருவாக அல்லது கல்வித் துறைகளில் துலக்கென சிறந்த நிலையேற்படுத்திக் கொண்ட ஆட்களிடையே யிருந்து, அரசியலமைப்புப் பேரவையின் விதப் புரையின்மீது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதி, உறுப்பின ரொருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் குறிக்கோளானது சுதந்திர மானதும், நீதியானதுமான தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடாத்துவதற்கான தாகவிருத்தல் வேண்டும்.

(3) ஆளெவரும், பாராளுமன்றத்தின், மாகாண சபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வருவாராயின் அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவிருப்பின் அல்லது பகிரங்க அலுவலரொருவராகவிருப்பின் அல்லது நியமிக் கப்படின் அல்லது எத்தகையதுமான ஏதேனும் பதவியில் அரசின் ஊழியத்திலிருப்பின் அல்லது அரச ஊழியத்தை மேற்கொள்ளின் ஆணைக்குழு வின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந் திருத்தலோ ஆகாது.

(4) உயர்நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறை யீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைப் பதவியி லிருந்து அகற்றுதல் தொடர்பான அரசியல

மைப்பினதும் வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றுதலுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் முன்கூட்டிய அனுமதியைப் பெறாமல் ஆணைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகைதராத ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத் தேதியிலிருந்து பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினர், இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் தம் பதவியை முன்னரே துறந்தாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக் கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர்மீது குடியியற்றகுதியீனம் விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின்கீழ் பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) சனாதிபதி, இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழு தொடர்பான உறுப்பினரொருவரின் கடமைகளைப் புரிவதிலிருந்து அவருக்குத் தற்காலிக விடுப்பு வழங்கலாம் என்பதுடன், அத்தகைய விடுப்புக்காலப் பகுதிக்கு தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கென ஆணைக்குழு உறுப்பினரொருவராக இருப்பதற்குத் தகைமை பெற்ற ஆளொருவரை நியமிக்கவும் நியமிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு நியமனமும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது செய்யப்படுதல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்கு பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனாதிகள் செலுத்தப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்குச் செலுத்தப்படும் வேதனாதிகள் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உறுப்பினரின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

(9) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்.

104. (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிபானது எக்கூட்டத்தில் எடுக்கப்படுகின்றதோ அக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் கூட்டத்தின் தவிசாளர் அல்லது அதில் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அல்லது முடிபு அத்தகைய வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகவிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

முடிபுகளின் முடிவாந் தன்மையும் தொடர்ச்சியிலிருந்து விடுபாட்டு நிலையும்.

104அ. தேர்தல் மனுக்களை அல்லது மக்கள் தீர்ப்பு மனுக்களைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு 126 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழும் உறுப்புரை 104ஏ அத்துடன் உறுப்புரை 130இன் கீழும் உயர்நீதிமன்றத்துக்கும் 144 ஆம் உறுப்புரையின்கீழ் மேல் முறையீட்டு நீதிமன்றத்துக்கும் அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்துக்கும் அத்துடன் ஏதேனும் சட்டத்தினால் ஏதேனும் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட நியாயதிக்கத்துக்கும் அமைய —

(அ) அரசியலமைப்பின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது மக்கள் தீர்ப்பை எடுத்தல் தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது புரியப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஆணைக்குழுவின் ஏதேனும் முடிபை, பணிப்பை அல்லது செயலை ஏதேனும் ஏதுவின் மீதும் எத்தகையதுமான எம்முறையிலும் ஏற்றுக் கவனிப்பதற்கு அல்லது கேட்பதற்கு அல்லது முடிபுசெய்வதற்கு அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கு நீதிமன்றமெதுவும் தத்துவமோ அல்லது நியாயாதிக்கமோ கொண்டிருத்தலாகாது ; அத்துடன் அந்த முடிபுகள், பணிப்புகள் அல்லது செயல்கள் முற்றுமுடிவானவையாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கெதிராக, அரசியலமைப்பின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது மக்கள் தீர்ப்பை எடுத்தல் தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு அல்லது வேறு வழக்கு நடவடிக்கை எதுவும் அமைதலாகாது.

ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்.

104ஆ. (1) ஆணைக்குழுவானது, அரசியலமைப்பினால், சனாதிபதியின் தேர்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல், மாகாண சபைகளின் உறுப்பினர்களின் தேர்தல், உள்ளுரதிகாரசபைகளின் உறுப்பினர்களின் தேர்தல் அத்துடன் மக்கள் தீர்ப்பொன்று எடுத்தல் தொடர்பான அப்போதைக்கான சட்டத்தினால் —

(அ) ஆணைக்குழுவுக்கு ; அல்லது

(ஆ) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு,

அளிக்கப்பட்டதான அல்லது அதன்மீது அல்லது அவர்மீது சுமத்தப்பட்டதான அல்லது அதற்கு அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டதான எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அத்தகைய தேர்தல்களினதும், மக்கள் தீர்ப்புக்களினதும் நோக்கங்களுக்காக தேருநர் இடாப்புகளைத் தயாரித்தலுக்கும் மீளாய்தலுக்கும் அத்துடன் அத்தகைய தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடாத்துதல் தொடர்பான எல்லாத் தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் மட்டுப்படுத்தாது அவை உட்பட, பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் தேர்தலை அல்லது மக்கள் தீர்ப்புக்களை நடாத்துதல் அல்லது எடுத்தல் தொடர்பான எல்லாச் சட்டங்களையும் வலுவுக்கி வதனை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சட்டங்களை வலுவுக்கிடுதல் பொறுப்பிக்கப்பட்ட எல்லா அரச அதிகாரிகளும் அத்தகைய வலுவுக்கிடுதலை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக் குழுவுடன் ஒத்துழைப்பது அவர்களது கடமை யாதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, அதன் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும் பிர யோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவ தற்கும், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை களின் ஏற்பாடுகளுக்கிணங்க, பாராளுமன்றத் துக்குப் பொறுப்பைக் கொண்டதாகவும் வகை சொல்லற்பாலதாகவும் இருத்தல் வேண்டு மென்பதுடன், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக் கான அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை யொன்றை அத்தகைய ஆண்டினபோது பாராளு மன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(4) (அ) ஆணைக்குழுவானது, ஒரு தேர்தற் காலப்பகுதியின்போது, ஆணைக்குழுவின் தவிசாளரின் கைப்பட்ட எழுத்திலான பணிப் பொன்றின் மூலம் அல்லது ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்மீது தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட எழுத்திலான பணிப்பொன்றின் மூலம் —

(i) அத்தகைய தேர்தலிற் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரின் அல்லது ஏதேனும் அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் தேர்தலை மேம்படுத் துகின்ற அல்லது தடுக்கின்ற நோக்கத் துக்காக ;

(ii) அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரினால் அல்லது அரசியற் கட்சியானால் அல்லது சுயேச்சைக் குழுவினால்.

அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் பயன்படுத்தப்படுவதைத் தடைசெய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல், அத்தகைய ஆதனம் அப்போதைக்கு எந்த ஆளின் அல்லது அலுவலரின் கட்டுக் காப்பில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதோ அந்த ஆள் அல்லது அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(5) (அ) ஆணைக்குழுவானது, ஒரு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்த அவசியமானதென ஆணைக்குழு கருதக் கூடியவாறு விடயத்துக்கேற்ப, ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு சேவை நடாத்துநர்க்கு அல்லது ஒரு புதினப் பத்திரிகையின் எவரேனும் உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பை எடுத்தல் தொடர்பில் ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய வழிகாட்டிகளைக் காலத்துக்குக்காலம் வழங்கத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(ஆ) உட்பந்தி (அ) வின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் வழிகாட்டிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடபடிகளையும் எடுத்தல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது தவிசாளரினதும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினது தவிசாளரினதும் கடமையாதல் வேண்டும்.

(இ) விடயத்துக்கேற்ப, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டிகளை மீறுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியை பெயர் குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கலாமென்பதுடன், அவர் அத்தகைய நியமனத் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் தேர்தல்மீது தாக்கம் உண்டுபண்ணும் சகல அரசியல் ஒலிபரப்பு அல்லது வேறு ஏதேனும் ஒலிபரப்புத் தொடர்பாகவும் விடயத்துக் கேற்ப, அவ்வொலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அல்லது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முகாமையை தேர்தலின் முடிவுவரை கையேற்றலும் வேண்டும் ; அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும், அக்காலத்தின் போது தகுதிவாய்ந்த அதிகாரியால் கையேற்கப்பட்ட அத்தகைய முகாமையுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புடைய எப் பணியையும் நிறைவேற்றுதலுமாகாது.

(ஈ) பாராளுமன்றமானது, உட்பந்தி (இ)இன் கீழ் நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த அதிகாரியின் தத்துவங்களையும் பணிகளையும் சட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யலாம்.

ஆணைக் குழுவால் பொலிசைப் பரவிச் சேவை விடுதல்.

104இ. (1) விடயத்திற்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்காக கட்டளையொன்றை ஆக்குவதன் மீது அல்லது மக்கள் தீர்ப்பை எடுக்கத் தேவைப் படுத்திப் பிரகடனமொன்று ஆக்கப்படுவதன்மீது ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய தேர்த்தலை அல்லது மக்கள் தீர்ப்பை நடாத்துவதற்கு அல்லது எடுப்பதற்கு ஆணைக்

குழுவால் தேவைப்படுத்தப்படும் வசதிகளையும் பொலிசு அலுவலர்களின் எண்ணிக்கையையும் பற்றி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட வசதிகளையும் பொலிசு அலுவலர்களையும் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறுவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, அதற்குக் கிடைக்கப்பெற்ற பொலிசு அலுவலர்களையும் வசதிகளையும் விடயத்திற்கேற்ப, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்பு நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தும் அத்தகைய முறையில் பரவிச் சேவையிலிடலாம்.

(4) இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின்கீழ் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறச் செய்த பொலிசு அலுவலர் ஒவ்வொருவரும் ஒரு தேர்தல் காலப்பகுதியின்போது, ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தலும் அதன் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயற்படுதலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் கீழ் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறச் செய்த எவரேனும் பொலிசு அலுவலருக்கெதிராக ஆணைக்குழுவின் பணிப்பைப் பின்பற்றி அல்லது ஆணைக்குழுவின்கீழ்ப் பணியாற்றுகையில் நல்லெண்ணத்துடன் அத்தகைய பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக அல்லது காரியத்துக்காக தொடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் அமைதலாகாது.

ஆயுதப் படையினரைப் பரவிச் சேவையிலிடுதல்.

104ஈ. விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான கட்டளையொன்று ஆக்கப் படுவதன்மீது அல்லது மக்கள் தீர்ப்பொன்றை எடுக்குமாறு தேவைப்படுத்திப் பிரகடனமொன்று செய்யப்படுவதன்மீது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்துவதற்கு அல்லது எடுப்பதற்குப் பாதகமாக அமையக்கூடிய எவையேனும் செயல்களை அல்லது சம்பவங்களைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு எனக் குடியரசின் ஆயுதப் படையினரைப் பரவிச் சேவையிலிடுதல் தொடர்பில் சனாதிபதிக்கு விதப்புரைகளைச் செய்வது ஆணைக்குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளர் தலைமை அதிபதியும் ஆணைக் குழுவின் வேறு அலுவலர்களும்.

104உ. (1) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும். இவர், அரசிலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைவாக, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகள்மீது ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி, அதனால் அவர் தொடர்பான ஏதேனும் விடயம் கருத்துக்கெடுக்கப்படுமிடத்துத் தவிர, ஆணைக் குழுவின் கூட்டங்களிற் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அவர் அத்தகைய கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமையுடையவராதலாகாது.

(3) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களை அத்தகைய நியதி நிபந்தனைகள்மீது நியமிக்கலாம்.

(4) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினதும் ஆணைக்குழுவின் வேறு அலுவலர்களினதும் சம்பளங்கள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், திரட்டுநிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(5) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி. ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, ஆணைக்குழுவின் முடிபுகளை நடைமுறைப்படுத்துதலும், ஆணைக்குழுவின் அலுவலர்கள்மீது கண்காணிப்பைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(6) ஆணைக்குழு, அதன் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஆணைக்குழுவின் வேறு அலுவலருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர், ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் அல்லது புரிதலும் வேண்டும்.

(7) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் பதவியானது —

(அ) அவரது இறப்பின்மீது ;

(ஆ) ஆணைக்குழுவுக்கு முகவரியிடப்பட்டு எழுத்தில் அவர் பதவிதுறப்பதன்மீது;

(இ) அவர் அறுபத்தைந்து வயதை அடைவதன்மீது;

(ஈ) சுகயீனம் அல்லது உடல் அல்லது உளப் பலவீனம் காரணமாக ஆணைக்குழுவால் அவர் அகற்றப்படுவதன்மீது; அல்லது

(உ) (8) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுடனிணங்கியொழுகும் வண்ணம், எண்பிக்கப்பட்ட துர்நடத்தையின் அல்லது ஆற்றலின்மையின் ஏதுவின்மீது அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளுமன்றத்தின் பிரேரணையின்பேரில் அவர் ஆணைக்குழுவால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மீது,

வறிதானதாக வருதல் வேண்டும்.

(8) (அ) இவ்வுறுப்புரையின் ஏழாம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரேரணை (சமூகமாயிராதவர்கள் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மையொன்றினால் ஆதரிக்கத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிரேரணையொன்றை முன்வைப்பதற்கான தீர்மானமொதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரால் கையொப்பமிடப்பட்டிருப்பதுடன் சார்த்துரைக்கப்பட்ட துர்நடத்தையின் அல்லது ஆற்றலின்மையின் முழு விவரங்களும் அதில் தரப்பட்டிருந்தாலன்றி சபாநாயகரால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுதலோ ஆகாது.

(ஆ) பாராளுமன்றமானது, அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முறை, சார்த்துரைக்கப்பட்ட துர்நடத்தையின் அல்லது ஆற்றலின்மையின் புலனாய்வு மற்றும் எண்பிப்பு, நேரிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமாகவோ தோன்றி விசாரிக்கப்படுவதற்கான தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் உரிமை என்பன உட்பட, பிரேரணையொன்று முன்வைக்கப்படுதல் தொடர்பிலான எல்லா விடயங்களுக்கும் சட்டத்தால் அல்லது நிலையியற் கட்டளைகளால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலர்கள்.

104ஊ. (1) ஆணைக்குழுவானது, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் ஒரு தெரிவத்தாட்சி அலுவலராக இருக்கவென ஓர் ஆளைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் நியமித்தல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவுவதற்கு ஒன்று அல்லது

ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கவும் நியமிக்கலாம்.

(2) ஓராம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் அலுவலரும் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டனவான அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் ஆணைக்குழுவினால் வழங்கப்படற்பாலதான அத்தகை பணிப்புகளுக்கமைந்தவராதல் வேண்டுமென்பதுடன், அதற்காக ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைக் கொண்டவராதலும் வகைசொல்லற்பாலராதலும் வேண்டும்.

பகிரங்க அலுவலர்கள்.

104எ. ஏதேனும் தேர்தல்களில் அல்லது மக்கள் தீர்ப்புகளில் கடமைகளையும் பணிகளையும் புரிகின்ற எல்லாப் பகிரங்க அலுவலர்களும், அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் ஆணைக்குழுவின் பணிப்பின்கீழ்ச் செயலாற்ற வேண்டும் என்பதுடன், அதற்காக ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைப் கொண்டவர்களாகவும் வகைசொல்லற்பாலனராகவும் இருத்தலும் வேண்டும்.

எழுத்தாணைகளை வழங்குதற்கான உயர்நீதிமன்றத்தின் தத்துவம்.

104ஏ. (1) அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கமானது, அரசியலமைப்பால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் அதனால் பிரயோகிக்கப்படுகையில் எழக்கூடியதான ஏதேனும் விடயம் தொடர்பில், உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டுகின்ற ஒவ்வொரு விண்ணப்பமும், எச்செயலை அவ்விண்ணப்பம் தொடர்புறுத்துகின்றதோ அச்செயல் புரியப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பம் கோப்பிடப்பட்டதிலிருந்து

இரண்டு மாதங்களுக்குள் உயர்நீதிமன்றம் அதனைக் கேட்டலும் இறுதியாகத் தீர்த்துவைத்தலும் வேண்டும்.

பொருள்கோடல்.

104ஒ. இவ்வத்தியாயத்தில் "ஒரு தேர்தல் காலப்பகுதியின்போது" என்பது, விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான அல்லது மக்கள் தீர்ப்பொன்றை எடுப்பதற்கான பிரகடனமொன்று அல்லது கட்டளையொன்று ஆக்கப்படுவதன்மீது தொடங்கி, விடயத்துக்கேற்ப, அத்தகைய தேர்தலில் அல்லது மக்கள் தீர்ப்பில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் பெறுபேறு வெளிப்படுத்தப்படுகின்ற தேதியன்று முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாதல் வேண்டும்.

அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**10.** அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையானது, அதன் (1) ஆம் பந்தியிலுள்ள "குடியரசின் சனாதிபதியினால் அவரது கைப்பட எழுதப்பட்ட எழுத்தாணையின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, குடியரசின் சனாதிபதியினால் அவரது கைப்பட எழுதப்பட்ட எழுத்தாணையின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**11.** அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரையானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் "சனாதிபதி நியமித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சனாதிபதி, 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நியமித்தல் வேண்டும்.", என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியில், "வேறோர் ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய வேறோர் ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

அரசியலமைப்பின் 111 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**12.** அரசியலமைப்பின் 111 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(2) மேல்நீதிமன்ற நீதிபதிகள் —

(அ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியால் அவர் கைப்பட்ட ஆணையின்மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விதப்புரையானது, சட்டத்துறைத் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையின் பின்னர் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) நீதித்துறைச்சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் அகற்றப்படக்கூடியவர்களாதலும் சனாதிபதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்." ; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் :—

"(4) மேல்நீதிமன்ற நீதிபதி எவரும் தமது கைப்பட சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்தின் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.".

அரசியலமைப்பின் 111அ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.

**13.** அரசியலமைப்பின் 111 அ என்னும் உறுப்புரை அதன் (1) ஆம் பந்தியில் "ஆணைமூலம் நியமிக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது ஆணைமூலம் நியமிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

அரசியலமைப்பில் 111அ. என்னும் புதிய உறுப்புரையை உட்புகுத்துதல்.

**14.** அரசியலமைப்பின் 111 அ என்னும் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அரசியலமைப்பின் 111 ஆ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் :—

தீவு முழுவதற்குமான பிசுக்கால்.

"111ஆ. பிசுக்கால் ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் தீவு முழுவதற்குமான பிசுக்காலாதல் வேண்டுமென்பதுடன், எல்லா முதனிலை நீதிமன்றங்களையும் சார்ந்த பிரதிப் பிசுக்கால்கள் மீதான கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் பிரயோகித்தலும் வேண்டும்.".

அரசியலமைப்பின் 116ஆம் உறுப்புரையை 111இ என்னும் உறுப்புரையாக மீள இலக்கமிடுதல்.

**15.** அரசியலமைப்பின் 116 ஆம் உறுப்புரையானது 111இ என்னும் உறுப்புரையாக இத்தால் மீள இலக்கமிடப்படுகின்றது.

அரசியலமைப்பில் XV.அ என்னும் அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

**16.** அரசியலமைப்பின் 111இ என்னும் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அரசியலமைப்பின் அத்தியாயம் XV.அ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும்.

## "அத்தியாயம் XVஅ

### நீதித்துறைச் சேவை ஆணைக்குழு

நீதித்துறைச் சேவை ஆணைக் குழுவின் அமைப்பு.

111ஈ. (1) சனாதிபதியால் 41இ. என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக நியமிக்கப்படும் பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்றத்தின் வேறு இரண்டு நீதிபதிகளையும் கொண்ட நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும் (இது இவ்வத்தியாயத்தில் "ஆணைக் குழு" என்று குறிப்பீடு செய்யப்படும்).

(2) பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்.

111உ. (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஆணைக்குழு வின் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியொருவர், அவர் முன்கூட்டியே பதவி துறந்தாலன்றி அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அல்லது உயர்நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக இல்லாதொழிந்தாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும், அத்துடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் முடிபுகள் யாவும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் ஒரு பெரும்பான்மையின் மூலமாதல் வேண்டும் ; அத்துடன் வாக்குகள் சமமாக இருக்குமிடத்தில் கூட்டத்தின் தவிசாளர் அறுதியிடும் வாக்கொன்றையுடையவராதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அத்தகைய வெற்றிடம் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

(5) சனாதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அவரது கடமைகளிலிருந்து விடுப்பு அளிக்கலாம் என்பதுடன், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது அத்தகைய விடுப்புக் காலத்திற்கு தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கென ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்குத் தகைமையுடைய ஆளொருவரை நியமிக்கவும் நியமிக்கலாம்.

(6) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது, குறித்துளிக்கப்படும் காரணத்திற்காக, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

ஆணைக் குழுவின் உறுப்பினர்களின் படிகள்.

111ள. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்கு பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது; அத்துடன் அது உறுப்பினரின் நிலையான நியமனத்திற்குரியவையும் அதினின்று பெறப்படுபவையுமான சம்பளத்திற்கும் வேறு படிகளுக்கும் மேலதிகமானதாயிருத்தல் வேண்டும் :

ஆயினும், இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ்ப் படிகளாகச் செலுத்தப்படவேண்டிய தொகை தீர்மானிக்கப்படும் வரை, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், இவ்வத்தியாயம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு நேர்முந்திய நாளன்று அவர்கள் பெற்ற அத்தகைய தொகையைப் படிகளாகத் தொடர்ந்து பெறுதல் வேண்டும்.

ஆணைக் குழுச் செயலாளர்.

111ஏ. ஆணைக்குழுவுக்குச் செயலாளர் ஒருவரிருத்தல் வேண்டும். அவர் முதனிலை நீதிமன்றங்களின் சிரேட்ட நீதித்துறை அலுவலர்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் தத்துவங்கள்.

111ஐ. (1). நீதித்துறைச் சேவை ஆணைக் குழுவுக்கு —

(அ) மேல்நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்வதற்கும் ;

(ஆ) நீதித்துறை அலுவலர்களையும் அட்டவணைப்படுத்தப்பட்ட எல்லாப் பகிரங்க

அலுவலர்களையும் நியமனம் செய்வதற்கும், இடமாற்றம் செய்வதற்கும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் பதவிநீக்கம் செய்வதற்கும்.

ஆன தத்துவம் இத்தால் உரித்தாக்கப்படுகின்றது.

(2) ஆணைக்குழுவானது —

(அ) மேல்நீதிமன்ற நீதிபதிகளின் பயிற்சி தொடர்பான விதிகளையும் நீதித்துறை அலுவலர்களினதும் அட்டவணைப் படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களினதும் ஆட்சேர்ப்பு, பயிற்சி, நியமனம், பதவியுயர்வு அத்துடன் இடமாற்றத்துக்குக்கான திட்டங்களையும் ஆக்கலாம் ;

(ஆ) ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

(3) விடயத்திற்கேற்ப, ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எவரும் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தை அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் பேணப்படும் பதிவேடுகளையும் இடாப்புகளையும் வேறு ஆவணங்களையும் பரிசோதனை செய்வதற்கும் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்துவதற்கும் ஆன தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், சகல உயர்வை உட்படுத்

தும் இடமாற்றங்களைத் தவிர, அட்டவணைப் படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள் தொடர்பில் இடமாற்றங்களைச் செய்வதற்கான அல்லது; கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விடயங்களிலும் அத்தகைய வரையறைகளுக்கமையவும் பதிற் கடமையாற்றும் நியமனங்களைச் செய்வதற்கான தத்துவத்தை ஆணைக்குழுவின் செயலாளருக்குக் கையளிக்கலாம்.

நீதித்துறை அலுவலர்களும் பகிரங்க அலுவலர்களும் பதவி துறக்கலாம்.

111ஒ. நீதித்துறை அலுவலர் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் எவரும் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட்ட எழுத்தின் மூலம் பதவிதுறக்கலாம்.

சட்ட நடவடிக்கைகளிலிருந்தான விடுபாட்டுரிமை.

111ஓ. ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது உறுப்பினருக்கு அல்லது செயலாளருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக ஆணைக்குழுவின் அத்தகைய தவிசாளராக, உறுப்பினராக, செயலாளராக அல்லது அலுவலராக, தமது கடமைகளை அல்லது பணிகளைப் புரிகையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக குடியியல் அல்லது குற்ற வழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

ஆணைக் குழுவுடன் தலையிடுதல் தவறொன்றாதல்.

111ஔ. (1) தமது சட்டமுறையான கடமையின் போது தவிர, வேறுவகையாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது, தனியே அல்லது எவரேனும் ஆள் மூலம் அல்லது ஆளுடன் சேர்ந்து, எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஆணைக்குழுவால் எடுக்கப்படும் ஏதேனும் முடிபின்மீது அல்லது ஆக்கப்படும் கட்டளையின்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது அதனது எவரேனும் உறுப்பினர்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்

என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் ஏதேனும் நீதித் துறைப் பதவிக்கான அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்கப் பதவிக்கான எவரேனும் விண்ணப்பகாரருக்கு அல்லது வேட்பாளருக்கு ஒரு சான்றிதழை அல்லது நற்குணச்சான்றை வழங்குதல் தவறொன்றாதல் ஆகாது.

(2) அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மேல்நீதிமன்றமும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குற்றத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொருள்கோடல். 111க. (அ) இவ்வத்தியாயத்தில் —

"நியமனம்" என்பது, இவ்வத்தியாயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்கான நியமனத்தையும் உள்ளடக்கும் ;

"நீதித்துறை அலுவலர்" என்பது, ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின், நியாய சபையின், அல்லது நீதி நிருவாகத் துக்காக அல்லது ஏதேனும் தொழில் அல்லது வேறு பிணக்குத் தொடர்பில் நீதித்தீர்ப்பளிப்பதற்காக உருவாக்கப் பட்டுத் தாபிக்கப்பட்ட நிறுவனத்தின் ஒரு நீதிபதியாக, தலைமைதாங்கும் அலுவலராக அல்லது உறுப்பினராக

பதவிவகிக்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும். ஆனால், உயர்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற அல்லது மேல்நீதிமன்ற நீதிபதியொருவரை அல்லது நடுத்தீர்ப்புப் பணிகளைப் புரிகின்றவோர் ஆளை அல்லது எந்தப் பகிரங்க அலுவலரொருவரின் பிரதான கடமை நீதித்துறைத் தன்மைத்தான பணிகளைப் புரிதலற்றதோ அந்தப் பகிரங்க அலுவலரை உள்ளடக்காது ;

"அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்" என்பது உயர்நீதிமன்றப் பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர், மேல்நீதிமன்றத்தின் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் பதிவாளர், பிரதிப் பதிவாளர், அல்லது உதவிப் பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல்நீதிமன்றத்தின் பிசுக்கால், பிரதிப் பிசுக்கால், உயர்நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் பதிவகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவர்களும் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வகுதியொன்றில் அல்லது நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சரால் ஆக்கப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு வகுதிகளில் உள்ளடக்கப்பட்டவருமான எவரேனும் பகிரங்க அலுவலர் என்று பொருள்படுதல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்பின் கருத்தெல்லைக்குள் ஆளொருவர் நீதித்துறை அலுவலரொருவரா அல்லரா என்னும் வினாவை ஏற்றுக்கவனிப்

பதற்கு, அல்லது தீர்மானிப்பதற்கு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனம் எதுவும் நியாயாதிக்கம் கொண்டதாதலாகாது ; ஆனால் அத்தகைய வினா ஆணைக்குழுவால் மட்டுமே தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் மீதான அதனது முடிபு முற்றுமுடிபானதாதலும் வேண்டும்.

(இ) உட்பந்தி (அ) என்பதில் குறிப்பிடு செய்யப்பட்டவாறான அத்தகைய தீர்மானத்திற்கு முன்னர் அத்தகைய ஆளின் செயல் அல்லது அத்தகைய ஆளின் முன்னிலையில் நடைபெற்ற வழக்கு நடவடிக்கை எதுவும் அத்தகைய தீர்மானத்தின் காரணமாக செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.".

*அரசியலமைப்பின் உறுப்புரைகள் 112, 113, 113அ, 114, 115 அத்துடன் 117 என்பவற்றை நீக்குதல்.*

**17.** அரசியலமைப்பின் உறுப்புரைகள் 112, 113, 113அ, 114, 115 அத்துடன் 117 என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

*அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**18.** அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் "சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியில், "சனாதிபதி ஆளொருவரை நியமிக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சனாதிபதி, 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளொருவரை நியமிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

19. அரசியலமைப்பின் 154ஊ என்னும் உறுப்புரையானது, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் "ஏனைய மூன்று உறுப்பினர்கள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

அரசியலமைப்பின் 154ஊ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.

20. அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அரசியலமைப்பின் அத்தியாயம் XVIII அ ஆகப் பயனுறுதலும் வேண்டும் :–

அரசியலமைப்பில் XVIII அ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

"அத்தியாயம் XVIII அ

**தேசிய பொலிசு ஆணைக்குழு**

தேசிய பொலிசு ஆணைக்குழுவின் அமைப்பு.

155அ. (1) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தவிசாளரையும் ஏழு உறுப்பினர்களையும் கொண்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும் (இது இவ்வத்தியாயத்தில் 'ஆணைக்குழு' என்று குறிப்பீடுசெய்யப்படும்). அரசியலமைப்புப் பேரவை அதன் விதப்புரையைச் செய்கையில் பகிரங்கச் சேவை ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்கலாம். சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆளெவரும், பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வருவாராயின் அவர் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகித்தலோ ஆகாது.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக, அவரது நியமனத்தின் உடன்முன்னராக, அரசசேவையில் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக இருந்த ஒவ்வொராளும், அத்தகைய நியமனம் பயனுறுவதன்மீது, அத்தகைய பதவியை வகியா தொழிதல் வேண்டும் என்பதுடன், பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக மேலும் நியமிக்கப் படுவதற்குத் தகவற்றவராதலும் வேண்டும் :

ஆயினும், அத்தகைய எவரேனும் ஆள், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இல்லா தொழிகின்றவரைக்கும் அல்லது உறுப்பினரொரு வராகத் தொடர்ந்திருக்கின்றபோது, விடயத்திற் கேற்ப, அவர் ஓர் பகிரங்க அலுவலராக அல்லது நீதித்துறை அலுவலராக இருந்திருப்பின் எந்த வயதில் ஓய்வுபெறும்படி தேவைப்படுத்தப் படுவாரோ அந்த வயதை எய்தினால், அவர், அத்தகைய சேவை தொடர்பிலான ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் அத்துடன் வேறு படிகள் பற்றிய ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கத்திற்கென ஒரு பகிரங்க அலுவலராகவும் அல்லது ஒரு நீதித்துறை அலுவலராகவும் அத்துடன் அரச சேவையில் ஓய்வூதியங்கொண்ட பதவியொன்றை வகிக்கின்றவராகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொரு வரும் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையிழப்பிற்கு அமைந்தவராக வருவாராயின், அல்லது சனாதிபதிக்கு முகவரி யிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் முன்கூட்டியே தமது பதவியைத் துறந்தாலன்றி, அல்லது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியால் பதவியி லிருந்து அகற்றப்பட்டாலன்றி, அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும்

தவறுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலன்றி அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர்மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலன்றி அல்லது இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின்கீழ்த் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலன்றி அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும். ஆனால் உறுப்பினரொருவராக அவரது பதவிக்காலம் முடிவுற்றதன்பின்னர் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது. உறுப்பினரெவரும் இரண்டு தடவைகளுக்கு மேல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகப் பதவிவகிப்பதற்குத் தகவுடையவராதலாகாது.

(6) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர் ஆணைக்குழுவின் முன் கூட்டிய அனுமதி இல்லாமல் ஆணைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும் பட்சத்தில், அவர் அத்தகைய மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவற்றவராதலும் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்

கப்படுதல் வேண்டும் என்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(8) ஆணைக்குழுவின் தவிசாளரும் உறுப்பினர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்.

155ஆ. (1) ஆணைக்குழுவின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) தவிசாளர், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன், அவர் வருகைதராதபோது சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால், அவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் முடிவுகள், முடிவெடுக்கப்படும் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையொன்றினாலானதாதல் வேண்டும் என்பதுடன், வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில் தலைமை தாங்கும் ஆள் அறுதியிடும் வாக்கொன்றை யுடையவராதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்றுள்ளது என்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அல்லது முடிபு எதுவும் அத்தகைய வெற்றிடத்தின் காரணத்தினால் அல்லது தவிசாளரின் அல்லது உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

*சட்ட நடவடிக்கைகளிலிருந்து விடுபாட்டுரிமை.*

155இ. நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் உயர்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு அமைய, நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், இவ்வத்தியாயத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு, குழுவொன்றுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி அத்தகைய ஆணைக்குழுவால், ஒரு குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரிப்பதற்கான அல்லது அதன்மீது எடுத்துமொழிவதற்கான அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

*ஆணைக்குழுவின் செயலாளர்.*

155ஈ. ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவையாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் ஆணைக்குழுச் செயலாளர் ஒருவரும் அத்தகைய வேறு அலுவலர்களும் இருத்தல் வேண்டும்.

*கிரயச் செலவுகளும் மற்றும் செலவுகளும்.*

155உ. ஆணைக்குழுவின் கிரயச் செலவுகளும் மற்றும் செலவுகளும் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழுவுடன் தலையிடுதல்.*

155ஊ. (1) தமது சட்டமுறையான கடமையின் போது தவிர, வேறுவகையாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது, தாமே அல்லது வேறெவரேனும் ஆள் மூலம் அல்லது ஆளுடன் சேர்ந்து எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது ஒரு குழுவின் முடிபின்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற, அல்லது ஆணைக்குழுவின் அல்லது ஒரு குழுவின் எவரேனும் உறுப்பினர்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்

தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்று (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கான தத்துவமுடையதாதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் தத்துவங்கள்.

155எ. (1) (அ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் பதவிநீக்கம் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவானது, பதவியுயர்வு, இடமாற்ற, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு, பதவியிலிருந்து அகற்றுதற் தத்துவங்களை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் மாகாணப் பொலிசுச் சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படுகையிலும் தாபிக்கப்படும் போதும் அத்தகைய ஆணைக்குழுக்களின் தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசுச் சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் இடருற்ற எவரேனும் ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனி

பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் ஆன நடவடிக்கைமுறைகளைத் தாபித்தல் வேண்டு மென்பதுடன், பாராளுமன்றத்தால் அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட சட்டத்திற்கிணங்க நிவாரணத்தை ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, ஆட்சேர்ப்பிற்கும் பயிற்சிக்குமான திட்டங்களை வகுத்தல், பொலிசுச் சேவையின் வினைத்திறனையும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல், தேசிய பிரிவினதும் மாகாணப் பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், வேறு உபகரணங் கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும், நடத்தை பற்றிய சட்டக்கோவை, பதவியுயர்வு களையும் இடமாற்றங்களையும் செய்வதில் பின்பற்றப்படவேண்டிய தரநிர்ணயங்கள் என் பன உட்பட அவசியமானது அல்லது பொருத் தமானது என ஆணைக்குழு காலத்துக்குக்காலம் கருதக்கூடியவாறு பொலிசு அலுவலர்கள் தொடர்பிலான எல்லா விடயங்களுக்கும் ஏற்பாடு செய்தலும் அத்துடன் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, அரசியலமைப்பிற் கான ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள நிரல் Iஇன் பின்னிணைப்பு Iஇன்கீழ் அதற்குரித் தாக்கப்பட்ட அத்தகைய எல்லாத் தத்துவங்களை யும் பிரயோகித்தலும் அத்தகைய எல்லாப் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் குழுக்கள்.

155ஏ. (1) ஆணைக்குழு, அதனால் குறித்து ரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டு அத்துடன் பதவிநீக்க தத்துவங்களை ஆணைக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப் படவேண்டிய (ஆணைக்குழுவின் உறுப்பி னர்களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழுவொன்றுக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) அத்தகைய குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடவடிக்கைமுறையும் கூட்ட நடப்பெண்ணும் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

ஆணைக் குழுவால் பணிகள் கையளிக்கப் படுதல்.

155ஓ. (1) ஆணைக்குழு, அதன் ஏதேனும் வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமன, பதவியுயர்வு, இடமாற்ற, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அத்துடன் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கும் நடவடிக்கைமுறைக்கும் அமைய பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய கையளிப்பை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

மேன்முறையீடு செய்யும் உரிமை.

155ஔ. (1) பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஓ என்னும் உறுப்புரைகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட குழுவால், அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியால் அல்லது பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு அல்லது இடமாற்றம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயமொன்றின் மீதான அல்லது பதவி நீக்கம் தொடர்பானஏதேனும் கட்டளையால் இடருற்ற பொலிசு அலுவலர் ஒருவர், அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கும், ஆணைக்குழுவினால் மேன்முறையீடொன்று

கேட்கப்படுவதற்குமென நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறையையும் நேர காலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி ஆணைக்குழுவால் காலத்துக்குக்காலம் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய மேன்முறையீட்டின்மீது, அத்தகைய கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, ஒழிப்பதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான, அல்லது அது தொடர்பில் பணிப்புகளை வழங்குவதற்கான அல்லது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்குக் கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ்க் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப் படும் விதிகளை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(4) இவ்வத்தியாயத்தின் 155ஏ ஆம் அத்துடன் 155ஒ ஆம் உறுப்புரைகளின்கீழ் விடயத்திற்கேற்ப, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது குழுவொன்றுக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு கையளிக்கப்படுவதன்மீது ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவிலிருக்கையில், இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் பணிகளை அல்லது கடமைகளைப் புரிதலாகாது அல்லது நிறைவேற்றுதலாகாது.

நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்.

155ஔ. பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம், பதவிநீக்கம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் ஒன்றின்மீதான ஏதேனும் கட்டளையால் இடருற்ற பொலிசு அலுவலர் ஒருவர் அத்தகைய கட்டளைக்கு எதிராக 59 ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அந்நியாயசபை ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

உளதாம் விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் பேணுதல்.

155க. ஆணைக்குழு வேறுவிதமாக ஏற்பாடு செய்யும்வரை, பொலிசுச் சேவை தொடர்பில் வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும், ஒழுங்கு விதிகளும் நடவடிக்கைமுறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாதலும் வலுவிலிருத்தலும் வேண்டும்.

ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு வகை சொல்லற்பால தாதல்.

155ங. ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்குப் பொறுப்பைக் கொண்டதாதலும், அத்துடன் வகைசொல்லற்பாலதாதலும் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புதலும் வேண்டும்.".

அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

21. அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியில், "சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியில், "ஓர் ஆளைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓர் ஆளை, 41இ என்னும் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதி நியமித்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**22.** அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

(1) "நீதித்துறை அலுவலவர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "114 ஆம் உறுப்புரையில் தவிர—" என்னும் சொற்களுக்குப் பதிலாக "111க ஆம் உறுப்புரையில் தவிர—" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) "பகிரங்க அலுவலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(இஅ) அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினரொருவரை ;

(இஆ) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை ;

(இஇ) தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை ;

(இஈ) தேர்தல்கள் ஆணையாளர் தலைமை யதிபதியை ;

(இஉ) தேர்தல் ஆணைக்குழுவினால் அவ்வாணைக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களை.".

அரசியல மைப்பிற்கான ஒன்பதாம் அட்ட வணையைத் திருத்துதல்.

23. அரசியலமைப்பிற்கான ஒன்பதாம் அட்டவணை, I ஆம் நிரலுக்கான I ஆம் பின்னிணைப்பில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பின்னிணைப்பின் 3 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"3. தேசிய பொலிசுப் பிரிவிற்கான ஆட்சேர்ப்பும், மாகாணப் பிரிவுகளிலிருந்து தேசியப் பிரிவிற்கு பொலிசு அலுவலர்களின் பதவியுயர்வும், தேசிய பொலிசு ஆணைக்குழுவால் செய்யப் படுதல் வேண்டும்.";

(2) அப்பின்னிணைப்பின் 6 ஆம் விடயத்தில் "சனாதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படும் என்பதுடன் சனாதிபதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் என்பதுடன் அது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பின்னிணைப்பின் 7 ஆம் விடயத்தில் "சனாதிபதியின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய பொலிசு ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பின்னிணைப்பின் 9.2 ஆம் விடயத்தில் "சனாதிபதி, அவர் அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, ஏதேனும் மாகாணப் பகுதியின் உறுப்பினர்களுக்கு மாற்றுப்பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய பொலிசு ஆணைக்குழு, அது அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, ஏதேனும் மாகாணப் பிரிவின் உறுப்பினர்களுக்கு மாற்றுப்பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**24.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய தேதியன்று அரசியலமைப்பின் 56ஆம் உறுப்புரையாலும் 112 ஆம் உறுப்புரையாலும் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினதும் உறுப்பினர்களாகப் பதவிவகிக்கும் ஆட்கள், அத்தகைய உறுப்பினர்களாகத் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அரசியலமைப்பின் முறையே 54 ஆம் உறுப்புரையின்கீழும் 111ஈ என்னும் உறுப்புரையின்கீழும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினதும் உறுப்பினர்கள் எத்தேதியில் நியமிக்கப்படுவார்களோ அத்தேதிவரை அரசியலமைப்பின்கீழ், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் அவ்வாணைக் குழுக்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைத் தொடர்ந்து பிரயோகித்தலும் வேண்டும்.

*அரசியலமைப்பின் நீக்கஞ்செய்யப்பட்ட 56 ஆம், 112 ஆம் உறுப்புரைகளின் கீழான ஆணைக் குழுக்கள் தொடர்ந்திருத்தல்.*

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று அரசியலமைப்பின் முறையே 56 ஆம் உறுப்புரையின் (7) ஆம் பந்தியின்கீழும் 113 ஆம் உறுப்புரையின் கீழும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பதவி வகிக்கின்றவர்களான ஆட்கள் அதே நியதி நிபந்தனைகளின்கீழ் அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

**25.** (அ) இச்சட்டம் தொடங்குத் தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கின்றவர்களான பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்றத்தின் எல்லா நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் அத்துடன் எல்லா நீதிபதிகளும் 41இ என்னும் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

*பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் முதலானோர் தொடர்ந்து பதவிவகித்தல்.*

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று சட்டத்துறைத் தலைமையதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமன்), அத்துடன் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆக பதவிவகிக்கும் ஒவ்வொராளும், 41இ என்னும் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அதே நியதி நிபந்தனைகளின்கீழ் அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் முதலானோர் பதவியைத் தொடர்ந்து வகித்தல்.

**26.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று –

(அ) மேல்நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக,

(ஆ) நீதித்துறை அலுவலர் ஒருவராக, அட்டவணைப் படுத்தப்பட்ட அலுவலர் ஒருவராக, பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது பொலிசு அலுவலர் ஒருவராக,

பதவிவகிக்கின்றவரான ஒவ்வொருவரும், அதே நியதி நிபந்தனைகள்மீது, அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

பதிலீடும் சேமிப்புகளும்.

**27.** (1) சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, "தேர்த்தல்கள் ஆணையாளர்" அத்துடன் "தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களம்" என்னும் சொல்லமைப்புகள் அரசியலமைப்பில் மற்றும் எழுத்திலான எதேனும் சட்டத்தில் அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் அல்லது வேறு ஆவணத்தில் எங்கெங்கு இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் அத்தகைய சொற்றொடர்களுக்குப் பதிலாக "தேர்தல் ஆணைக்குழு" என்னும் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று தேர்தல்கள் ஆணையாளராகப் பதவிவகிக்கும் ஆள், இச்சட்டம் தொடங்குவதற்கு உடன்முன்னர் அவருக்கு உரித்தாக்கப்பட்டவாறு தேர்தல்கள் ஆணையாளரின் பதவிக்குரிய அத்துடன் தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்களையும் பணிகளையும், 103 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தேர்தல் ஆணைக்குழுவொன்று அமைத்துருவாக்கப்படும் வரை, தொடர்ந்து பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் என்பதுடன், தேர்தல் ஆணைக்குழு அவ்வாறு அமைத்துருவாக்கப்பட்டதிலிருந்தும் அதன்பின்னரும் தேர்தல்கள் ஆணையாளராகப் பதவிவகியாதொழிதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தால் அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரை திருத்தப்படுவதற்கு முன்னர் அவ்வுறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளரால் அல்லது அவருக்கெதிராக தொடரப்பட்டு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் முன்னரான நாளன்று முடிவுறாதிருக்கும்

எல்லாத் தொடர்ச்சிகளும், வழக்குகளும், வேறு சட்ட நடவடிக்கைகளும், தேர்தல் ஆணைக்குழுவால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட தொடர்ச்சிகளாகவும் வழக்குகளாகவும் வேறு சட்டநடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை தேர்தல் ஆணைக்குழுவின் பெயரில் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

**(4)** இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் இச்சட்டத்தால் அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரை திருத்தப்படுவதற்கு முன்னர் அவ்வுறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளரால் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட முடிபு அல்லது ஆக்கப்பட்ட கட்டளை அல்லது வழங்கப்பட்ட விதிக்கை எதுவும், தேர்தல் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட முடிபாக அல்லது ஆக்கப்பட்ட கட்டளையாக அல்லது வழங்கப்பட்ட விதிக்கையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**28.** இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னிலையில் முடிவுறாதிருக்கின்ற, எவரேனும் பொலிசு அலுவலரின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் பதவிநீக்கம் தொடர்பான எல்லாக் கருமங்களும் அரசியலமைப்பின் அத்தியாயம் XVIIIஅ என்றதால் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு அகற்றப்பட்டனவாயிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய கருமங்கள் அத்தகைய தேசிய பொலிசு ஆணைக்குழுவால் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னிலையில் முடிவுறாதுள்ள கருமங்கள் பொலிசு ஆணைக்குழுவுக்கு அகற்றப்பட்டிருத்தல்.

**29.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்வீதி, கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.